

அரசு
நல வாழ்வுத்
திட்டம்

# ஏழை எளியோர்க்கான
# பன்முனை இலவச
# மருத்துவப் பரிசோதனை
# மற்றும்
# சிகிச்சைத் திட்டம்

தமிழ்நாட்டில் முதலமைச்சர்

**கலைஞர்** அவர்களின்

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,**
**நமக்கு நாமே திட்டம்**

போன்ற பல திட்டங்களைத் தொடர்ந்து


மற்றொரு புதிய திட்டம்தான்

# அரசு
# நலவாழ்வுத்
# திட்டம்

தமிழ்நாட்டில் மொத்தம் 12 ஆயிரத்து 617 ஊராட்சி மன்றங்களும், 613 பேரூராட்சிகளும், 102 நகராட்சிகளும், 6 மாநகராட்சிகளும் உள்ளன. கிராமப்புறங்களில் சுமார் 1400 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 364 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகள் உள்ளன.

ஏழை எளியோர் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து அதனால் ஏற்படும் வேதனையைத் தணித்துக் கொள்வதற்கு மட்டுமே மருத்துவர்களையும், அரசு சுகாதார நிலையங்களையும் நாடிச் செல்கின்றனர்.

பொதுவாக மக்களிடையே நிலவிவரும் இந்த மனோநிலையை மாற்றி, நோய்கள் வருமுன் தடுக்கும் அணுகுமுறையை மக்களிடையே பரப்பி, நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் எனும் விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், நோய்த்தடுப்பு முறைகளை



எளிய வகையில் விளங்க வைத்துப் பின்பற்றச் செய்திடவும், **ஏழை எளியோர்க்கான இலவச பன்முனை மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டம்** ஒன்றை அறிமுகம் செய்து பரவலாகவும் தீவிரமாகவும் செயல்படுத்திட முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்து அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு கண், பல், காது, மூக்கு, தொண்டை, வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், நீரிழிவு, காசநோய் போன்றவைகளுக்கான மருத்துவப் பரிசோதனைகளுடன் இருதய நோய், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நோய், முதியோர்க்குத் தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நோயைக் கண்டறிந்து அதற்கான முதல் சிகிச்சைகளும் செய்யப்படும். முகாம்களுக்கு வரும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக இரத்தப் பரிசோதனை செய்யப்படும்.


ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மாதமும், ஐம்பது இடங்களில் இந்த பன்முறை மருத்துவ பரிசோதனை மற்றும்



சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள மக்கள் அனைவரும் பயனடையும் வண்ணம் இத்தொடர் திட்டத்தின்கீழ் மருத்துவப் பரிசோதனைகளும் சிகிச்சையும் அளிக்கப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் இந்த முகாம்களைச் செம்மையாக நடத்தி அவற்றின் பயன்கள் முழு அளவில் பொதுமக்கள் எல்லோரையும் சென்றடைவதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும்.

இந்தக் குழு, ஒவ்வொரு மாதமும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் நடத்த வேண்டிய ஐம்பது இடங்களைத் தேர்வு செய்து, எந்தெந்த நாட்களில் எந்தெந்த மருத்துவ குழு,




எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு விரிவான முறையில் அறிவிக்கும்.

ஒவ்வொரு மருத்துவ முகாமிலும், 1. மருத்துவர் நிபுணர் குழு, 2. பரிசோதனை சாதனங்கள், 3. மருந்துகள், 4. பொதுமக்களுக்கு வழங்குவதற்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை அட்டைகள், 5. மருத்துவர்க்கான வாகனவசதி ஆகியவற்றை உறுதி செய்து கொள்ள மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, ஒவ்வொரு மாதத்திற்கும் செயல்திட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றை வகுக்கும்.

ஒவ்வொரு முகாமின்போதும் நல வாழ்வு பற்றிய கண்காட்சியும், கருத்துக் காட்சியும், வீடியோ படமும் கிராமத்து




இலவச
பன்முனை
மருத்துவ
பரிசோதனை

மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் முகாமிலேயே முதல் சிகிச்சையும் இலவசமாக மருந்துகளும் வழங்கப்படும்.


தொடர் சிகிச்சை தேவைப்படின், நோயின் தன்மையைப் பொறுத்து எந்த மருத்துவமனைக்கு எப்பொழுதெல்லாம் செல்ல வேண்டும் எனும் விவரங்களுடன் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.



தொடர் சிகிச்சை பெற வேண்டியோர்க்குத் தேவைப்படும் விவரங்கள் அனைத்தும் மாவட்ட அளவில் முகாம்வாரியாக கணிப்பொறியில் புகுத்தப்பட்டு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாநில அளவில், மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டத்தை முழு அளவில் ஒருங்கிணைத்து நடத்திட தனி அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்படுவார்.

முகாம்கள் நடத்திடத் தேவையான அளவுக்கு, அந்தந்த மாவட்டத்தில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் (NGOs), இந்திய மருத்துவர்கள் சங்கங்களின் மாவட்ட கிளைகளையும் தொடர் சிகிச்சைக்காக மருத்துவக் கல்லூரிகளையும்



தனியார் மருத்துவமனைகளையும் மற்றும் மருத்துவ நிபுணர்களின் சேவையையும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

மிகப் பிரமாண்டமான பரிமாணங்களைக் கொண்டுள்ள இந்தத் திட்டம், பரிட்சார்த்தமாக திருவள்ளூர், தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் டிசம்பர் மாதம் முழுவதும் செயல்படுத்தப்படும்.

முகாம்கள் நடக்கும்போதே, முகாம்கள் செயல்படும் விதம், அங்கு வருவோரின் கருத்துப் பிரதிபலிப்பு, முகாம்கள் மூலம் விளையும் நன்மைகள், முகாம்கள் மேலும் பயனுள்ள வகையில் நடத்தப்படுவதற்கான ஆலோசனைகள் ஆகியவற்றைப்



பெறுவதற்காக நிபுணத்துவம் கொண்ட குழு ஒன்றினால் விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு (Concurrent Evaluation) செய்யப்படும்.

இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் குறைகள் இருப்பின் அவை களையப்பட்டு, 2000 ஜனவரி மாதம் முதல் முழு அளவில் அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும்.



"நாட்டுக்கழகு நலவாழ்வு என்று,
நாடி வருதே தமிழக அரசு"

தமிழரசு அச்சகம், சென்னை—2.


Rx